© தமிழ்நாடு அரசு 2000

பதிவெண்

# காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது

காஞ்சிபுரம், டிசம்பர் 1, 2000

கார்த்திகை 16, விக்கிரம, திருவள்ளுவர் ஆண்டு—2031 [ எண் 12

பொருளடக்கம்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உதவி ஆட்சியர் அறிவிக்கை .. | 113 | உள்ளாட்சித் துறை அறிவிக்கை .. | [illegible] |
| கோட்டாட்சியர் அறிவிக்கை .. | 116 | | |
| வட்டாட்சியர் அறிவிக்கை .. | 120 | ஆவணப் பதிவுத் துறை அறிவிக்கை .. | [illegible] |


## உதவி ஆட்சியர் அறிவிக்கை.

### நில அளவை முடிவான அறிவிப்பு

(ந.க. 3151/99. ஆ/. 16—9—2000)

சிற்சில வட்டங்களைச் சேர்ந்த சிற்சில கிராமங்களிலுள்ள அடியிற்கண்ட உட்பிரிவுகளின் நில அளவை இப்போது முடிவாகியிருக்கிறதென்று நில அளவையையும் எல்லைகளையும் குறித்த தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு 8 ஆவது சட்டம், 13 ஆவது பிரிவின்படி இதனால் அறிவிக்கப்படுகிறது.

2. இதனால் அறிக்கையிடப்படும் நில அளவை மேற்படி சட்டம், 14 ஆவது பிரிவிற்கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு உரிமையியல் நீதிமன்றத்தாரின் தீர்ப்பாணை மூலமாகத் திருத்தும் பட்டாலொழிய அந்த நில அளவைப் பதிவானது அதில் தீர்மானித்துப் பதிவு செய்யப்பட்டிருக்கும் எல்லைகள் சரியாகத் தீர்மானித்துப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கு இறுதி முடிவான ருசுவாகும்.

செங்கல்பட்டு வட்டம்

44. கோவளம் கிராமம்

புல எண்ணும் உட்பிரிவும்—40-1எ3, 43-4ஏ.

2000 செப்டம்பர் 16.

(3645/99/ஆ. 16—10—2000)

திருக்கழுகுன்றம் வட்டம்

177. நெய்குப்பி (பூந்தண்டலம்) கிராமம்

| வரிசை எண். (1) | புல எண்ணும் உட்பிரிவும். (2) | பரப்பு (3) ஹெக்டேர். | பெயர் (4) |
|---|---|---|---|
| 1 | 334-1எ1பி | 0.10.5 | அ. கோபால் நாயக்கர் |
| 2 | 1எ2சி | 0.02.0 | மா. நவனீத நாயக்கர் |
| 3 | 1சி1 | 0.15.0 | அ. கோபால் நாயக்கர் |

மண்டலம் 15



## புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியம்

### புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு உரிமக் கட்டணம் உயர்த்தி விதித்தல்

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் அத்தியாயம் XI மற்றும் அத்தியாயம் XII 220 முதல் 251 வரை கண்ட பிரிவுகளின் படியும் அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவுகளின்படியும் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கு இதற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட யாதொரு இடமும் ஒன்றிய ஆணையர் / ஊராட்சி மன்றத் தலைவர் உரிமையினைப் பெறாமலும் அந்த உரிமையில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்படாமலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டுள்ள அந்த ஒன்று அல்லது மேற்பட்ட காரியங்களுக்கு உபயோகப்படுத்துதல் கூடாது என மேற்படி சட்டத்தின் பிரிவு 262 (1)ன் கீழ் விளம்பரப்படுத்தப்படுகிறது. புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிகளில் அபாயகரமானதும் அருவருக்கத்தக்கது-மான தொழில்களுக்கு உரிமக் கட்டணம் கீழ் குறிப்பிட்டுள்ள காலம் (4)ல் உள்ளவாறு விதித்து உயர்த்தி வசூலிக்க புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய தீர்மான 2006ம் ஆண்டு ஜனவரி மாத 5ம் நாளிட்ட சாதாரணக் கூட்டத்தில் தீர்மான எண் 571ல் அங்கீகரித்து இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ள உரிமக் கட்டணங்களை காஞ்சிபுரம் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்த அறுபது நாட்களுக்குப் பிறகு வசூலிக்கப்படும். (ஏற்கனவே உள்ள 1986ம் ஆண்டு செப்டம்பர் மாத 24 ஆம் நாளிட்ட இம்மன்ற தீர்மான எண்.104ன் திருத்தமாகும் இப்பிரசுரம்)

#### நிபந்தனைகள்

1. புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட எந்த இடத்தையும் மேற்படி ஊராட்சி ஒன்றிய ஆணையர் / தலைவர் மூலம் கொடுக்கப்படும் உரிமம் இல்லாமல் அந்த உரிமத்தில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகள்படி இன்றி மற்றப்படி இதன் கீழ் குறிப்பிட்டுள்ள காரியங்களில் ஒன்றிற்கோ பலவற்றிற்கோ உபயோகிக்கக் கூடாது.

2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காரியங்கள் எதற்காயினும் ஓரிடத்தை உபயோகிக்க விரும்பும் நபரும் அக்காரியத்திற்காக அவ்விடத்தை உபயோகித்துக் கொள்ள உரிமம் வழங்குமாறு புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு இயந்திர நிர்வாக கட்டணம் செலுத்த எழுத்து மூலம் மனு செய்த கொண்டு செலுத்த வேண்டும். ஆண்டு உரிமம் ஊராட்சி மன்ற தலைவரிடம் எழுத்து மூலம் மனு செய்து அம்மனுவில் கீழ்குறிப்பிட்ட உரிமக் கட்டணம் முன்பணமாக செலுத்த வேண்டும்.

3. ஆணையர் / ஊராட்சி மன்றத் தலைவர்கள் தான் அவசியம் என்று கருதுகிற நிபந்தனைகளையும் தடைகளையும் கண்டுள்ள உத்திரவின்படி உரிமம் புதுப்பிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

4. மேற்படி ஒவ்வொன்றும் விசேஷ காரணங்களால் அது ஒரு ஆண்டு முடிவதற்கு முன்னமே காலம் கடந்து போக வேண்டும் என்று ஆணையர்/ ஊராட்சி மன்றத் தலைவர் நினைத்தாலின்றி மற்றபடி அந்த ஆண்டு முடிவில் காலம் கடந்து போகும்.

5. (அ) உரிமம் பெறுவதற்கு எழுத்து மூலமாக செய்யும் மனுவை எந்த காரியத்திற்கு உரிமம் வேண்டும் என கேட்கப்படுகிறதோ அதற்காக அவ்விடத்தை உபயோகித்துக் கொள்வதற்கு 30 (முப்பது) நாட்களுக்கு முன்பு அல்லது உரிமம் புதுப்பிப்பதாக எழுத்து மூலம் செய்யும் மனுவை முன்னால் வழங்கப்பட்ட உரிமம் முடிவதற்கு முப்பது நாட்களுக்கு முன்பு அனுப்பி வைக்க வேண்டும்.

(ஆ) மேற்கண்ட காலவரைக்குட்பட்டு வராது காலம் கடந்து வரும் உரிமக் கட்டணம் ரூபாய் ஒன்றுக்கு 0.25/- (ரூபாய் இருபத்தைந்து பைசாக்கள்) வீதம் அதிகப்படி (அபராதம்) கட்டணம் சேர்த்து கட்ட வேண்டும்.

6. உரிமைதாரர் உரிமை நிபந்தனைகளுக்கும் திட்டங்களுக்கும் ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தி அமுலுக்கு கொண்டுவரப்படும். சகாய திட்டங்களுக்கு இது சம்மந்தமாக புனிததோமையார்மலை ஊராட்சி ஒன்றிய மன்றத்தினாலும் சம்மந்தப்பட்ட ஒவ்வொரு ஊராட்சி மன்றத்தினால் அறிவிக்கப்படும் சகலவிதமான அறிவிப்புகளும் ஆணையர் / ஊராட்சி மன்றத் தலைவர் உத்திரவுகளுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும். அவ்விதம் நடந்து கொள்ளாமல் மேற்குறித்த விதிகளையும் துணை விதிகளையும் அறிவிப்புகளையும் துணை சட்டங்களையும் மீறினால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் உரிமைதாரர் செலுத்திய தொகையினை பறிமுதல் செய்யப்படும்.

7. உரிமையானது கண்டிப்பாக வேறு ஒருவருக்கு மாற்றத்தக்கதல்ல, ஒரு தொழில் உரிமையாளர் சொந்தக்காரர் அல்லது இடம் இவற்றில் எந்த மாற்றமும் ஏற்படுமாயின் உரிமை கட்டணத்தில் 50 சதவீதம் செலுத்தி தக்க ஆவணங்களுடன் உரிமையை மாற்றிக் கொள்ளலாம்.

8. ஒரு இடத்தை ஒன்று அல்லது பல காரியங்களுக்கு உபயோகித்தால் ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனியே உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும்.